மக்களவை தேர்தல் 2024

தமிழகத்தில் அடுத்த கால் நூற்றாண்டுக்கு திமுக ஆட்சி தொடரும்: அமைச்சர்

சென்னை, மார்ச் 29: தமிழகத்தில் அடுத்துவரும் கால் நூற்றாண்டு காலத்துக்கு திமுக ஆட்சியே தொடரும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

கொளத்தூர் சட்டப்பேரவை தொகுதியில் திமுக சார்பில் சென்னை கிழக்கு மாவட்ட தேர்தல் பணி அலுவலகத்தை அமைச்சர் சேகர்பாபு வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசியது: தமிழகத்தில் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் வடசென்னை மக்களவைத் தொகுதியில் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம், கணேசபுரம் மேம்பாலம், ஆர்.கே. நகர் மேம்பாலம் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

வடசென்னையின் வளர்ச்சிக்கு தனிக்கவனம் செலுத்தி ரூ.2,000 கோடி அளவுக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் சென்னை தங்க சாலை மணிகூண்டு அருகே ரூ.4,414 கோடி அளவுக்கு வளர்ச்சி திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. வடசென்னையை, தென் சென்னைக்கு நிகராக அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படுத்துவோம். தமிழகத்தின் இனி கால் நூற்றாண்டுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தொடரும் என்றார் அவர்.

அதிமுகவில் கூடுதலாக தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் நியமனம்

சென்னை, மார்ச் 29: அதிமுகவின் மக்களவைத் தேர்தல் பணிக் குழு பொறுப்பாளர்களாக கூடுதலாக 6 பேரை நியமித்து, அக் கட்சியின் பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

அதிமுக சார்பிலும், அதன் தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக ஏற்கெனவே தேர்தல் பணிக் குழு பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் கூடுதலாக தருமபுரி தொகுதிக்கு அமைப்புச் செயலர் கே.சிங்காரம், முன்னாள் அமைச்சர் முல்லை வேந்தன் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர். வடசென்னைக்கு முன்னாள் அமைச்சர் மாதவரம் மூர்த்தி, கன்னியாகுமரிக்கு முன்னாள் எம்.பி., நாஞ்சில் எம்.வின்சென்ட், காஞ்சிபுரத்துக்கு முன்னாள் எம்.பி., சிட்லப்பாக்கம் ராஜேந்திரன், தென்காசிக்கு கொள்கை பரப்பு துணை செயலர் எஸ்.அய்யாத்துரை பாண்டியன் ஆகிய 6 பேர் நியமிக்கப்படுகின்றனர் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

திமுக, அதிமுகவுக்கு வாக்களிப்பதால் பயனில்லை

சென்னை, மார்ச் 29: மக்களவைத் தேர்தலில் திமுக, அதிமுகவுக்கு வாக்களிப்பதால் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்காது என்று தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை கூறினார்.

வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை பகுதிகளில் பாஜக வேட்பாளர்கள் பால் கனகராஜ், வினோஜ் பி செல்வம், தமிழிசை சௌந்தரராஜன் ஆகியோருக்கு ஆதரவாக பல்வேறு இடங்களில் அவர் பிரசாரத்தின்போது பேசியதாவது:

பாஜக ஆட்சிக்கு வந்தபோது பொருளாதாரத்தில் 11-ஆவது இடத்தில் இருந்த இந்தியா, இப்போது 5-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழக அரசின் கடன் ரூ.8.53 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

கோவையில் திமுக துணை பொதுச் செயலர் கனிமொழி பேசும்போது, அண்ணாமலை, இடஒதுக்கீடுக்கு எதிரானவர் என குற்றஞ்சாட்டியுள்ளார். குடும்ப இடஒதுக்கீடு முறைக்கு தான் நான் எதிரானவன்.

வடசென்னையில்கூட திமுக முன்னணி நிர்வாகி ஆற்காடு வீராசாமியின் மகன் கலாநிதி வீராசாமி ஏற்கெனவே வெற்றிபெற்றார். இப்போதும் அவரே போட்டியிடுகிறார். இது போன்ற குடும்ப இடஒதுக்கீடு முறையை எதிர்க்கிறேன். பிரதமர் மோடியின் அமைச்சரவையில் 76 பேரில் 11 பேர் பெண்கள், 12 பேர் பட்டியல் இனத்தவர், 27 பேர் பிற்படுத்தப்பட்டோர் இடம்பெற்றுள்ளனர். இந்திய அரசியலில் இதுபோல இது வரை இருந்தது இல்லை.

திமுக அமைச்சரவையில் 35 பேரில் 2 பேர் மட்டுமே பெண்கள். அதிலும் ஒருவர் குடும்ப இடஒதுக்கீடு முறையில் வந்தவர். பட்டியல் சமூகத்தினர் 3 பேர் மட்டுமே உள்ளனர். எனவே, சமூகநீதி பற்றி பேச திமுகவுக்கு அருகதை இல்லை. மீண்டும் மோடி ஆட்சி அமைவதால் பாஜக எம்பிக்கள் வெற்றி பெற்றால் தான் தமிழக மக்களுக்கு பயன் கிடைக்கும். மக்களவைத் தேர்தலில் திமுக, அதிமுகவுக்கு வாக்களிப்பதால் பயனில்லை என்றார் அவர். பிரசாரத்தின்போது, பாஜக செய்திதொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் உள்பட பலர் பங்கேற்றனர்.

தேர்தல் விதிகளை மீறும் காங்கிரஸ் வேட்பாளர்

பொன்.ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

நாகர்கோவில், மார்ச் 29: கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் விஜய்வசந்த் தேர்தல் விதிகளை மீறி செயல்படுகிறார் என்று பாஜக வேட்பாளர் பொன்.ராதாகிருஷ்ணன் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக அவர் நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது:

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு, தேர்தல் விதிகளை மீறி காங்கிரஸ் வேட்பாளர் விஜய்வசந்த், தனது நிறுவனத்தின் விளம்பரங்களை அவரது தந்தை புகைப்படத்துடன் இணைத்து பத்திரிகைகளில் வெளியிட்டு மறைமுகமாக வாக்கு சேகரிக்கிறார். மேலும், அவரது நிறுவனத்தின் சார்பில் பல்வேறு இடங்களில் விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.

பழைய விடியோக்களை தவறான முறையில் எடிட் செய்து, பாஜகவுக்கு எதிராக சமூக ஊடகங்களில் பிரசாரம் செய்து வருகின்றனர். இதுகுறித்து தேர்தல் ஆணையம் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதைய மக்களவை உறுப்பினரான காங்கிரஸ் வேட்பாளர் விஜய்வசந்த், கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக என்ன செய்தார் என்பதை, அமைச்சர் மனோ தங்கராஜ் கூறமுடியவில்லை. கடந்த 5 ஆண்டுகளில் குமரி மாவட்டத்தில் எந்த ஒரு வளர்ச்சித் திட்டப் பணிகளும் நடைபெறவில்லை. குமரி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தற்போது சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். ஜாதி, மதத்தை வைத்து அரசியல் செய்பவர்கள், இனி ஒன்றும் செய்ய முடியாது. கொல்லங்கோடு பகுதியிலிருந்து சனிக்கிழமை (மார்ச் 30) எனது பிரசாரத்தைத் தொடங்கவுள்ளேன். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஏப்ரல் 5 ஆம் தேதி குமரி மாவட்டம் தக்கலையில் வாக்குச் சேகரிக்கிறார். அவரது வருகை இத் தேர்தலில் திருப்புமுனையை ஏற்படுத்தும்.

மக்களவைத் தேர்தலில் நான் வெற்றி பெற்றால், கேரளத்துக்கு கனிமவளங்கள் கடத்தப்படுவதையும், கேரளத்திலிருந்து கழிவுகளைக் கொண்டுவந்து கொட்டுவதையும் தடுக்க கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

கூட்டணி தர்மத்தை மீறாத கட்சி அதிமுக

எடப்பாடி கே. பழனிசாமி

மதுரை மக்களவைத் தொகுதி அதிமுக தேர்தல் பணி அலுவலகத்தை வெள்ளிக்கிழமை திறந்துவைத்து, குத்துவிளக்கேற்றிய அந்தக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி. உடன், முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே. ராஜூ, ஆர்.பி. உதயகுமார், வேட்பாளர் மருத்துவர் பா. சரவணன் உள்ளிட்டோர்.

மதுரை, மார்ச் 29: கூட்டணி தர்மத்தை மீறாத கட்சி அதிமுக என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி தெரிவித்தார்.

மதுரையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் தமிழகத்தில் ஒரே அலைதான் வீசுகிறது. அது, அதிமுக கூட்டணிக்கான ஆதரவு அலை. முந்தைய அதிமுக அரசின் சாதனைகளை விளக்கிக் கூறி, அடுத்து நிறைவேற்றவுள்ள பணிகளுக்கு வாக்குறுதி அளித்து மக்களிடம் வாக்குகள் கோருகிறோம். அதிமுக கூட்டணிக்கு தமிழக மக்களிடம் அமோக வரவேற்பு உள்ளது.

இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள், தேர்தல் கால சூழலுக்கேற்ப கூட்டணி அமைத்துக் கொள்வது வழக்கம். அந்த வகையில்தான், முன்பு அதிமுக, பாஜக கூட்டணி அமைந்தது. கூட்டணியில் உள்ள கட்சியையே விமர்சிக்கும் வழக்கம் திமுகவுக்கு உண்டு. ஆனால், அதிமுகவுக்கு அந்த வழக்கம் கிடையாது.

அதிமுகவை நம்பி வந்து கூட்டணி அமைத்தவர்களுக்கு இறுதிவரை விசுவாசமாக இருப்போம். கூட்டணி தர்மத்தை மீறாத கட்சி அதிமுக. அதனால்தான், கூட்டணியில் இருக்கும் வரை பாஜகவை விமர்சிக்கவில்லை. தற்போது, அந்தக் கூட்டணியிலிருந்து விலகிவிட்டோம், விமர்சிக்கிறோம். தமிழக நலனுக்கு எதிரான நடவடிக்கைகளை விமர்சிப்பதுடன், முறியடிக்கவும் செய்வோம். கருத்துக் கணிப்பு என்ற பெயரால் அதிமுவுக்கு எதிரான பிரசாரத்தை சிலர் திட்டமிட்டு பரப்புகின்றனர். தமிழகத்தில் அதிமுகவுக்கான மக்கள் செல்வாக்கு உயர்ந்துள்ளது என்பதே உண்மையான கள நிலவரம் என்றார் அவர்.

தேர்தல் பணி அலுவலகம் திறப்பு: முன்னதாக, மதுரை கே.கே. நகரில் அமைக்கப்பட்டுள்ள அதிமுக தேர்தல் பணி அலுவலகத்தை எடப்பாடி கே. பழனிசாமி திறந்துவைத்து, குத்துவிளக்கேற்றினார். பிறகு, மறைந்த முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் உருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

சார்-பதிவாளர் அலுவலகங்கள் இன்று இயங்கும்

சென்னை, மார்ச் 29: தமிழகத்தில் அனைத்து சார்-பதிவாளர் அலுவலகங்களும் சனிக்கிழமை (மார்ச் 30) இயங்கும் என்று பதிவுத் துறை தெரிவித்துள்ளது.

தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் முக்கியத் துறைகளில் பதிவுத் துறையும் ஒன்றாகும். விழாக் காலங்கள், சுப தினங்கள் ஆகியன விடுமுறை நாள்களிலும் வந்தாலும் சார் பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதனால், கடந்த நிதியாண்டுகளைக் காட்டிலும் பதிவுத் துறை மூலமாக அரசுக்கான வருவாய் உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. வெள்ளி, சனி, ஞாயிறு தொடர் விடுமுறை என்றாலும், சனிக்கிழமை (இன்று) சார்பதிவாளர்கள் அலுவலகங்கள் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது,நிகழ் நிதியாண்டின் இறுதி மாதமான மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமை (மார்ச் 30) அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களும் இயங்கும் என்று பதிவுத் துறை தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மதுபானக் கூடம் இடிந்து 3 பேர் இறப்பு: கேளிக்கை விடுதியின் மேலாளர் கைது

சென்னை, மார்ச் 29: சென்னை ஆழ்வார்பேட்டையில் கேளிக்கை விடுதி மதுபானக் கூடம் இடிந்து 3 பேர் இறந்த விபத்து தொடர்பாக அந்த விடுதியின் மேலாளரை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

ஆழ்வார்பேட்டை சேமியர்ஸ் சாலையில் செயல்படும் ஒரு தனியார் கேளிகை விடுதியில் மதுபானக் கூடத்தின் முதல் தளத்தின் மேற்கூரை வியாழக்கிழமை மாலை திடீரென இடிந்தது. முதல் தளம் இடிந்து விழுந்ததால், தரைத்தளத்தின் மேற்கூரையும் இடிந்து விழுந்தது. மதுபானக் கூடத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஊழியர்கள் திண்டுக்கல் சைக்ளோன் ராஜ், மணிப்பூர் திருநங்கை லல்லி,மேக்ஸ் ஆகிய 3 பேர் உயிரிழந்தனர்.

மரணத்தை விளைவிக்கும் வகையில் செயல்பட்டதாக அபிராமபுரம் போலீஸார் வழக்குப் பதிந்து , கேளிக்கை விடுதியின் மேலாளர் கோட்டூர்புரத்தைச் சேர்ந்த சதீஷை (35) வெள்ளிக்கிழமை கைது செய்தனர். விடுதி உரிமையாளர் அசோக்குமாரை போலீஸார் தேடுகின்றனர்.

வல்லுநர் குழு ஆய்வு: இந்த சம்பவத்தில் மதுபானக் கூடம் பலவீனமான கட்டட அமைப்புகளுடன் இருந்ததால் விபத்து ஏற்பட்டதாகவும், மெட்ரோ ரயில் திட்டத்துக்காக அந்த கேளிக்கை விடுதியின் அருகே சுரங்கப் பாதை அமைக்கப்படுவதால் விபத்து ஏற்பட்டதாகவும் இரு வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

விபத்துக்கான காரணத்தை துல்லியமாக கண்டறிய கோட்டூர்புரம் உதவி ஆணையர் பாரதிராஜன் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் பொதுப்பணித்துறை பொறியாளர், மாநகராட்சி அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர். வெள்ளிக்கிழமை ஆய்வைத் தொடங்கிய இக்குழுவினர், ஓரிரு நாள்களில் ஆய்வை முடித்து,அறிக்கையை காவல் துறைக்கு அளிக்கும் என கூறப்படுகிறது.

கள்ளக்குறிச்சி தனியார் பள்ளி கலவர வழக்கு: விசாரணை நிலை அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு

சென்னை, மார்ச் 29: கள்ளக்குறிச்சி தனியார் பள்ளி மாணவி மரணத்தைத் தொடர்ந்து நிகழ்ந்த கலவரம் தொடர்பான வழக்கின் விசாரணை நிலை குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய சிறப்பு புலனாய்வு குழுவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கனியாமூரில் உள்ள தனியார் பள்ளி பிளஸ் 2 மாணவி 2022-ஆம் ஆண்டு ஜூலை 13-ஆம் தேதி பள்ளியின் மூன்றாவது மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

2022 ஜூலை 17-ஆம் தேதி மாணவி மரணத்துக்கு பள்ளி நிர்வாகம்தான் காரணம் எனக் கூறி, பல்வேறு அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் போராட்டக்காரர்கள், பள்ளிக்குள் நுழைந்து, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை தீவைத்து எரித்ததுடன்,பொருட்களையும் திருடிச் சென்றனர். இந்த கலவரம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது.

பள்ளித் தாளாளர் கோரிக்கை: இந்நிலையில், இந்த வழக்கு விசாரணையை வேறு புலன் விசாரணை அமைப்புக்கு மாற்றக் கோரி, பள்ளி தாளாளர் ரவிக்குமார், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

அந்த மனுவில், சம்பவம் நிகழ்ந்து 20 மாதங்கள் கடந்தும், மாணவியின் தாய் மற்றும் வன்முறையை தூண்டியவர்கள் யாரையும் விசாரணை செய்யவில்லை. வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, கலவரம் தொடர்பான வழக்குகளின் விசாரணையை சிறப்பு புலன் விசாரணைக் குழுவிடமிருந்து வேறு விசாரணை அமைப்புக்கு மாற்ற வேண்டும் என மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, கலவரம் தொடர்பான வழக்கின் விசாரணை நிலை குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்டார். மேலும், இந்த மனுவுக்கு சிறப்பு புலனாய்வு குழு, சின்ன சேலம் காவல் ஆய்வாளர் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஏப். 22-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

தமாகா தேர்தல் அறிக்கை நாளை வெளியீடு

சென்னை,மார்ச்29: தமாகா தேர்தல் அறிக்கையை அந்தக்கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 31) வெளியிடவுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி அமைத்து, தமாகா 3 தொகுதிகளில் போட்டியிடுகிறது. பாஜக, தமாகா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஜி.கே.வாசன் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். சென்னைக்கு உள்பட்ட தொகுதிகளில் சனிக்கிழமை பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார். இந்த நிலையில், தமாகாவின் தேர்தல் அறிக்கையை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் ஜி.கே.வாசன் ஞாயிற்றுக்கிழமை வெளியிடவுள்ளார்.

தேர்தல் ஆணையம் பிரதமரின் கைப்பாவையாக செயல்படுகிறது

ஈவிகேஎஸ். இளங்கோவன் குற்றச்சாட்டு

ஈரோடு, மார்ச் 29: தேர்தல் ஆணையம் பிரதமர் மோடியின் கைப்பாவையாக செயல்பட்டு வருகிறது என முன்னாள் மத்திய அமைச்சர் ஈவிகேஎஸ்.இளங்கோவன் எம்எல்ஏ குற்றம்சாட்டினார்.

ஈரோட்டில் அவர் செய்தியாளர்களுக்கு வெள்ளிக்கிழமை அளித்த பேட்டி: தேர்தல் ஆணையம் பிரதமர் மோடியின் கைப்பாவையாக செயல்பட்டு வருகிறது. கோவையில் அண்ணாமலை வேட்புமனு தாக்கல் செய்யும்போது பல தவறுகள் நடந்துள்ளன. அவரது வேட்புமனுவை ஏற்கக் கூடாது என அனைத்து கட்சிகளின் வேட்பாளர்களும், கட்சியினரும் தேர்தல் அதிகாரிகளை கேட்டுக்கொண்டும், அண்ணாமலை வேட்புமனுவை ஏற்றுக் கொள்வதாக தேர்தல் அலுவலர் அறிவித்துள்ளார்.

இது தேர்தல் ஆணைய சட்ட திட்டங்களுக்கு எதிரானது. ஈரோடு தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளருக்காக ஆயிரக்கணக்கான சேலைகளை வாக்காளர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதை ஈரோடு காவல் துறையினர் கண்டுபிடித்து வழக்குப் பதிவு செய்துள்ளனர். ஆனால்,தேர்தல் ஆணையம் இதுதொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேர்தல் ஆணையம், பாஜக மற்றும் கூட்டணிக் கட்சிகளின் விண்ணப்பங்களை விரைவில் ஏற்பதோடு, அவர்கள் கேட்கும் சின்னங்களை உடனே தருகிறது. ஆனால், திமுக தலைமையிலான கூட்டணிக் கட்சிகளுக்கு இன்னும் சின்னம் ஒதுக்கப்படவில்லை.

100 நாள் வேலைத் திட்டத்துக்கு கூடுதலாக ஊதியம் தரப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை தேர்தல் ஆணையத்தின் அனுமதியோடு அறிவிக்கிறோம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு இதுபோன்ற அரசு திட்டங்களை அறிவிக்கக் கூடாது என இருக்கும்போது இந்த விதிமீறலை தேர்தல் ஆணையம் அனுமதிக்கக் கூடாது. பிரதமர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கொள்கைக்காக பாடுபடும் கட்சி பாமக

மருத்துவர் ச.ராமதாஸ்

நெய்வேலி, மார்ச் 29: கொள்கைக்காக பாடுபடும் கட்சி பாமக என்று அந்தக் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் கூறினார்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் வெள்ளிக்கிழமை இரவு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், பங்கேற்ற ராமதாஸ், கடலூர் மக்களவைத் தொகுதி பாமக வேட்பாளர் தங்கர் பச்சானை ஆதரித்து வாக்கு சேகரித்து பேசியதாவது:

உலகமே வியந்து பார்த்து அதிசயிக்கும் மனிதர் பிரதமர் மோடி. நேரு குடும்பத்தில் ஜவாஹர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியோர் 3 முறை பிரதமர்களாக இருந்தனர். தற்போதைய மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 தொகுதிகளுக்கு மேல் வெற்றிபெற்று, பிரதமர் மோடி 3-ஆவது முறையாக மீண்டும் பிரதமராக பதவியேற்பார்.

காங்கிரஸ் கொள்கைகள் நாட்டு மக்களுக்கு தேவையில்லாதது எனக் கூறி, அந்தக் கட்சியை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காகத்தான் திமுகவை அண்ணா தொடங்கினார். இப்போதெல்லாம் யார் யாரோ கட்சி தொடங்குகின்றனர். கொள்கை தெரியாமல் பல்வேறு கட்சிகள் உள்ளன.

பாமக அன்று முதல் இன்று வரை கொள்கைகளுக்காகவும், அவற்றை நிறைவேற்றவும் தொடர்ந்து பாடுபட்டு வரும் கட்சி. பிரதமர் மோடியை எனக்குப் பிடிக்கும். என்னை அவருக்கு ரொம்பப் பிடிக்கும். தமிழகத்தின் மூத்த தலைவர் எனக்கூறி, என்னை கட்டித் தழுவினார். எந்தப் பதவிக்கும் போவதில்லை என்று சத்தியம் செய்து 85 வயது வரை அதைக் காப்பாற்றி வருகிறேன்.

கடலூர் மக்களவைத் தொகுதி பாமக வேட்பாளராக தங்கர் பச்சானை தேசிய ஜனநாயகக் கூட்டணி களமிறக்கியுள்ளது. இவர் வெற்றிபெற்றால், மாவட்ட வளர்ச்சிக்கு என்ன தேவை என்பதை துல்லியமாக திட்டமிட்டு நிறைவேற்றுவார். தங்கர் பச்சானின் செயல்பாடு மக்கள் சார்ந்து அற்புதமாக இருக்கும் என்றார் ச.ராமதாஸ்.

பொது அறிவிப்பு

சென்னை - 600017. ஹுமிபுல்லா சாலை, கதவு எண் 98/99- ல் இயங்கி வரும், எனது கட்சிக்காரர் திருவாளர்கள் ஜெயின் ஹவுசிங் LLP, (PAN AAOFJ0116H), திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுக்கா, அந்தநல்லூர் ஒன்றிய ஊராட்சி, கம்பரசம்பேட்டை கிராமம், சர்வே எண்கள் 258/3-ல் விஸ்தீரணம் 33 சென்ட், 258/4-ல் விஸ்தீரணம் 26 சென்ட், 258/5-ல் விஸ்தீரணம் 28 சென்ட், 258/6-ல் விஸ்தீரணம் 57 சென்ட், 258/7-ல் விஸ்தீரணம் 56 சென்ட், 258/8-ல் விஸ்தீரணம் 10 சென்ட், ஆகக் கூடுதல் 2.10 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலத்தை திரு கார்த்திகேயன் அவர்களின் பாரியாள் திருமதி L. சரண்யா என்பவரிடமிருந்து கிரயம் பெற உத்தேசித்து கிரய ஒப்பந்த ஆவணம் கையொப்பமிட்டு உள்ளார்கள். மேற்கூறிய சொத்தில் யாருக்கேனும் உரிமையோ, பாத்யதையோ உள்ளதாக கருதினால், அவ்வாறு கோருபவர்கள் இந்த பொது அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் கீழே கையொப்பமிடப்பட்ட நபரை உரிய ஆதாரங்களுடன் தொடர்பு கொள்ளலாம். அவ்வாறு யாரும் தொடர்புகொள்ளவில்லையெனில் மேற்கூறிய சொத்தில் திருமதி L. சரண்யாவை தவிர வேறு யாருக்கும் எந்தவித உரிமையும் பாத்யதையும் இல்லையென்றும் மேற்கூறிய சொத்தில் யாதொரு வில்லங்கமும் இல்லையென்றும் முடிவாக கருதப்படும்.

R. பரிஜானா பர்வீன், Advocate,
எண் 10/191, 1 வது தெரு, நேதாஜி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை - 600081.
Ph. 87545 72712.

இடம்: திருச்சிராப்பள்ளி
தேதி: 30.03.2024

IDFC :.பர்ஸ்ட் வங்கி லிமிடெட்

(முன்பு கேப்பிட்டல் :.பர்ஸ்ட் லிமிடெட் ஆக இருந்து, பின்னர் IDFC வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது IDFC :.பர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது)
பெருநிறுவன அடையாள எண் (CIN): L65110TN2014PLC097792

பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8ஆவது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600031.
தொ.பே.: +91 44 4564 4000 | தொலைநகல்: +91 44 4564 4022.

IDFC FIRST Bank

கடனீட்டுச் சொத்துக்களை ஒரக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம்-2002, பிரிவு 13(2)-இன் கீழ் அறிவிப்பு.

கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள் , எமது IDFC :.பர்ஸ்ட் வங்கி லிமிடெட்டிடமிருந்து (முன்பு கேப்பிட்டல் :.பர்ஸ்ட் லிமிடெட்-ஆக இருந்து, பின்னர் IDFC வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது IDFC :.பர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) கீழ்க்காணும் ஈடு பெற்ற கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர். கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள் பெற்றுள்ள கடன்களுக்கு ஈடாக தத்தமது சொத்துக்களை வங்கியிடம் அடமானம் வைத்துள்ளனர். அவர்கள் தங்களது கடன் ஒப்பந்தங்களின்படியான விதிமுறை நிபந்தனைகளைப் பின்பற்றத் தவறிவிட்டனர். எனவே, அந்தக் கடன் கணக்குகள் ஒழுங்கற்றதாக விட்டது. அதனால், அவை, RBI வழிகாட்டுதல்படி NPA (செயல்படாத சொத்து) என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி அவர்கள் IDFC :.பர்ஸ்ட் வங்கி லிமிடெட்டுக்குச் (முன்பு கேப்பிட்டல் :.பர்ஸ்ட் லிமிடெட்-ஆக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது IDFC :.பர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) செலுத்த வேண்டிய கடன் பாக்கிகள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதோடு, அத்தொகைகள் மீது அந்தந்த தேதியிலிருந்து ஒப்புக்கொள்ளப்பட்ட வீதத்தில் பொருந்துகின்ற வட்டியும் சேர்த்து விதிக்கப்படும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன் வகை	கடன்தாரர்கள் மற்றும் சுவட்டுக் கடன்தாரர்கள் பெயர்	பிரிவு 13(2)-இன் படி அறிவிப்பு நாள்	பிரிவு 13(2)-இன் அறிவிப்புப்படி நிலுவைத் தொகை	சொத்து முகவரி
1	55447672	சொத்து மீதான கடன்	1. மாரிமுத்து ராமன் 2. நதியா மாரிமுத்து	28.02.2024	இந்திய ரூபாய். 3,17,892.60	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுக்கா, பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், இரண்டம்புலிக்காடு துணைப் பதிவு மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், நதியம் ஊராட்சி எல்லை, 56 நதியம் கிராமம், பழைய ச.எண். 214/10, பட்டா எண்.350, ச.எண்.214/26, கதவு எண்.441, தமிழ்நாடு-614802, 1090 சதுர அடி (2.50 சென்ட்) பரப்பளவு வீட்டு மனை மற்றும் மங்களூர் டைல்ஸ் மற்றும் ஆஸ்பெட்டாஸ் ஷீட் கொண்ட கட்டிடம்: **நான்கு எல்லைகள்: கிழக்கு: சாலை, மேற்கு: நத்தம் புறம்போக்கு, வடக்கு: பாண்டியன் சொத்து, தெற்கு:ராஜாக்கண்ணு சொத்து.**

ஆகையால், இந்த அறிவுப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நீ